**ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை – 600 006.**

**பத்திரிகைச் செய்தி**

*2017-2018* ஆம் ஆண்டிற்கு அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளருக்கான தேர்வு *28.10.2021, 29.10.2021, 30.10.2021* மற்றும் *31.10.2021* தேதிகளில் *(*காலை/ மதியம் *)* நடைபெற உள்ளது. இத்தேர்விற்கு உரிய மாவட்டத்தின் அனுமதி சீட்டு *(Admit Card)* ஆசிரியர் தேர்வு வாரிய இணையதள முகவரி www.trb.tn.nic. *in* ல் தேர்வர்கள் தங்களது *User ID* மற்றும் கடவுச் சொல் *(Password)* உள்ளீடு செய்து *22.10.2021* முதல் பதிவிறக்கம் செய்யும் வகையில் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தேர்வர்கள் நுழைவுச் சீட்டினை *Printout* எடுத்து தேர்வு மையத்திற்கு நுழைவுச்சீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நேரம் *(Reporting Time)* மற்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ஏதேனும் ஒரு அசல் அடையாள அட்டையுடனும் *(Original Identity Card)* விண்ணப்பிக்கும்போது பதிவேற்றம் செய்த புகைப்படத்தின் அசல் பிரதியையும் *(Original Passport Size Photograph)* தவறாமல் எடுத்து வர வேண்டும். தேர்வு நாளன்று தேர்வர்கள் முற்பகல் தேர்விற்கு *07.30* மணிக்குள்ளாகவும், பிற்பகல் தேர்விற்கு *12.30* மணிக்குள்ளாகவும் தேர்வு மையத்திற்கு கண்டிப்பாக வருகைபுரிய வேண்டும் என்ற விவரம் தெரிவிக்கலாகிறது. தாமதமாக வரும் விண்ணப்பதாரர்கள் தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேற்படி கணினி வழித் தேர்விற்காக *(Computer Based Examination)* பயிற்சி தேர்வு *(Practice Test/ Mock Test)* மேற்கொள்ள விரும்பும் தேர்வர்கள் தங்களின் உள் நுழைவு மற்றும் கடவுச்சொல்லினைப் *(Login ID and Password)* யன்படுத்தி www.trb.tn.nic.inல் இணையதளத்தில் பயிற்சியினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. இந்த பயிற்சி வினாக்கள் முற்றிலும் பயிற்சிக்காக மட்டுமே எனவும் தெரிவிக்கலாகிறது. மேலும் நழைவுச் சீட்டில் மாவட்டம்/நகரம் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்விற்கு மூன்று நாட்களுக்கு முன்பு மீண்டும் ஒருமுறை தேர்வு மையத்தை குறிப்பிட்டு நுழைவுச் சீட்டு இணையதளத்தில் வெளியிடப்படும். தேர்வர்கள் அதனையும் கண்டிப்பாக பதிவிறக்கம் செய்து மேற்கண்ட அறிவுரையை பின்பற்றி தேர்வு மையத்தில் தேர்வினை எழுத அறிவுறுத்தப்படுகின்றது.

**நாள் :** *21.10.2021.* **தலைவர்**